## I. குருவாசகங்கள்

1. ஊழ்வினை தொடரும்
2. பழம் பிறப்புக்களின் நினைவு திருவருளால் இணையும் போது பிறப்பற்ற பெருநிலை கிட்டும்.
3. ஆவி, ஆன்மா, உயிர் மூன்றும் குருவருளால் இணையும் போது பிறப்பற்ற பெருநிலை கிட்டும்.
4. இறைவன், உயிர், பாசம்(தளை) எனும் மூன்றும் குருவருளாலேயே உணரப்பட்டு உரிமையாக்கப்படும்.
5. குருவையே விழியாக, வழியாக, வழித்துணையாகக் கொள்பவரே அணுக்கருவுலகையும் வென்று உயர்ந்து நிலைபேறு பெறுவர்.
6. பழம்பிறப்புணர்த்தும் உறவுகளும் உரிமைகளும் எல்லையற்ற களிப்பு நல்குமென்பதால் குருவாக்கிலோ, குருவாசகத்திலோ இவற்றை உணர்பவரே பத்தி, சத்தி, சித்தி, முத்தி எனும் நான்கிலும் நிறைவு பெறுவர்.
7. கரு, குரு, திரு மூன்றும் ஒருமைப்படுவரே ஞானத்தால் தருவாக இருப்போர்க்குத் தாயாகத், தாரமாகத், தானீன்ற மகளாகச் செயல்படுவர்.
8. குருவால் இட்டும், தொட்டும், சுட்டியும் விளக்கப்பட்டவையைப் பயன்படுத்த முடியாதவர் கண்ணிருந்தும் குருடரே.
9. அறியாமை மிக்கவரின் இச்சையடக்கச் சொல்லிய சூட்சுமங்களே மோட்ச நரகங்கள்.
10. புரியாமை மிக்கவரின் வெறிப்போக்குகளை நெறிப்படுத்தும் சூழ்ச்சிமிகு ஆட்சிச் சொற்களே பாவபுண்ணியங்கள்.

## II. குருவாசகங்கள்

1. அன்றுடம் கண்ணுக்குமுன் காணும் கணக்கற்ற காரிகையர் மாதந்தோறும் மலரும் புனித மலர்களே! இவர்களைப் பூசை செய்தே பூவுலகும், மூவுலகும் வெல்லலாம்.
2. அத்தனைக்கும் மூத்தவளான ஆத்தாளின் வடிவான பெண்டிரை அன்புடன் நினைத்துப் பாசமுடன் பரவிச் சேர்ந்து வாழ்ந்தாலே அருட்சொத்தனைத்தும் தேடி வந்து சேரும்.
3. பூசைத்தெய்வமாக, மலராக வந்த பாவையரை விதவையரென ஒதுக்கல் மாபெரும் பழியையும் பாவத்தையும் நல்கும்.
4. அங்கமெல்லாம் கையாக்கி ஆயுதமெடுத்துக் காக்கும் ஆத்தாளின் வடிவான பெண்டிரே பேரின்ப வீடு.
5. திங்கள் சூடிய சிவனே மங்கைக்குப் பாதி உடல் ஈந்த பிறகு மங்கையை அடிமைப்படுத்துதல் பெரும்பாவமும், பழியுமே தரும்.
6. சங்கரனாரே மங்கையை முடிமேல் தாங்கிய பின்னும் பெண்ணை அருளுலகத் தடையென மறுத்தலும், வெறுத்தலும், பழித்தலும் பேதமையன்றோ!
7. மூவரும், தேவரும், பிறரும் போற்றித் துய்த்து உய்வு பெறும் இன்ப ஊற்றான பெண்களே துன்பம் நீக்கும் மருந்து.
8. கங்கைக்கரைக் கண்ணன் எங்கும், எப்போதும் நங்கையரோடிருப்பது கண்டும் மங்கையரை நீக்கும் தவவாழ்வு எற்றுக்கு?
9. சித்தர்கள் கன்னிகளை ஆத்தாளாக்கிப் பூசைகள் நிகழ்த்த மறைகளும், முறைகளும், நெறிகளும், வேதங்களும், நாதங்களும், போதங்களும், ஓதங்களும் நல்கியிருப்பது கண்டும் பெண்ணைக் கோபிப்பதோ, தண்டிப்பதோ, வறுத்துவதோ பெரும்பாவம் என்பது புரியாதிருப்பது மடமையினும் மடமையன்றோ!

---

# குடமுழுக்கு விழாவில் குருட்டுத் தன்மை

இம்மண்ணுலக மதங்களுக்கெல்லாம் மூலமாக, முதலாக, ஆரம்பமாக, தாயாக இருக்கின்ற இந்துமதத்தைப் பதினெண் சித்தர்கள் இம்மண்ணில் தோன்றி விலங்குகளோடு விலங்காக இருந்த மனிசர்களுக்கு (மண்ணின் ஈசர்கள் --> இம்மண்ணுலக உயிரினங்களின் தலைவர்கள்) வழங்கினுர்கள். அதனுல் பண்படுத்தப்பட்ட மனதைப்பெற்ற மனிதவாழ்வு, குடும்பவாழ்வு, சமுதாய வாழ்வு என்ற முக்கோணக்கோட்டை அமைத்து வடிவப்பட்ட வளமான வாழ்வை வழங்கினுர்கள் பதினெண்சித்தர்கள்.

இந்த முக்கோணக் கோட்டையின் 'அருளாட்சி அலுவலகங்களே கோயில்கள்'; 'சமுதாய நல மன்றங்களே கோயில்கள்'; 'கலைக்கருவூலங்களே கோயில்கள்', 'பண்பாட்டு நாகரீகக் காப்பகங்களே கோயில்கள்', 'அருளை அநுபவப் பொருளாக வழங்கும் நிலையங்களே கோயில்கள்', 'அருட் கல்விக் கலாசாலைகளே கோயில்கள்', 'பிறவாமை பெற்ற அருளாளர்கள் நிலைத்து நின்று அருள்வழங்கும் கருவறைகளே கோயில்கள்' ...... எனவே, இவற்றிற்குப் பதினெண்சித்தர்களின் முறையில்தான் குடமுழுக்குச் செய்யவேண்டும்.

### கருவறை உயிர்ப்புக் குடமுழுக்கு

நள்ளிரவு 'இலைக் குலுங்கா நடுநிசி'யில்தான் நிகழ வேண்டும். இன்றைய கணக்குப் படி இரவு 11-11/2 மணி = 21/2 மணிநேரம்.

### கருவறை புத்துயிர்ப்புக் குடமுழுக்கு

நடுப்பகல் 'விண்ணுேக்கி இமை விரியா உருமவேளை'யில்தான் நிகழ வேண்டும். இன்றைய கணக்குப்படி பகல் 11-11/2 மணி = 21/2 மணி நேரம்.

இவற்றைக் கடைப்பிடிக்காத காரணத்தால்தான் வழிபாட்டு நிலையங்கள் காலப் போக்கில் அருள் ஊற்றெடுக்கும் ஊற்றுக்கண்கள் தடைபட்டுச் செயல்நலம் குன்றின. எனவே, இனியாவது இந்து மதம் காக்கப் பதினெண்சித்தர்கள் முறைப்படி குடமுழுக்கு விழாக் கொண்டாடப் படல் வேண்டும்.

பதினெண் சித்தர்கள் படைத்த 48 வகையான வழிபாட்டு நிலையங்கள் கோயில்கள் என்ற ஒரு பொதுச் சொல்லால் குறிக்கப் படும் மரபு காலப்போக்கில் பிறந்தது. எனவே, குடமுழுக்கு முறைகள் நாற்பத்தெட்டு வகைப்படும். அதாவது நாற்பத்தெட்டு வகையான வழிபாட்டு நிலையங்களும் அவை அவற்றிற்கு உரிய முறையில்தான் 1. குடமுழுக்குச் சாத்திரம், 2. குடமுழுக்குச் சாத்தரம், 3. குடமுழுக்குச் சாத்திறம், 4. கருவறை உயிர்ப்பு நூல், 5. கருவறைப் புத்துயிர்ப்பு நூல், 6. எழுந்தருளி உயிர்ப்பு நூல், 7. எழுந்தருளி புத்துயிர்ப்பு நூல், 8. பிருஞயாமம், 9. பிருஞயாமச் சாத்திரம், 10. பிருஞயாமச் சாத்தரம், 11. பிருஞயாமச் சாத்திறம், 12. காயந்திரி நூல், 13. காயந்திரி சாத்திறம், 14. காயந்திரி சாத்திரம், 15. காயந்திரி சாத்தரம், 16. குண்டலினி ஓகம் ...... எனப்படும் நூல்களில் (அனைத்து வகைச் சமய நூல்கள்) சிலவற்றையாவது உணர்ந்தவர்கள் முன்னிருந்து தலைமை தாங்கிக் குடமுழுக்குச் செய்ய வேண்டும்.

குறிப்பு: வழிபாட்டுக்குரியவை இறை, கடவுள், தெய்வம், பட்டவர், ஆண்டவர், தேவர்,... என்று 48 வகைப்படுவர். கடவுள் என்பது காலப்போக்கில் பொதுச் சொல்லாகி வழிபடு நிலையினரைக் குறிப்பதாயிற்று. இவற்றையும் உணர்ந்தவரே குடமுழுக்குச் செய்ய வேண்டும்.

தொடர்பு: இ.ம.இ. பொறுப்பாளர்
பிறமாச்சாரியார் சி. கவிக்குமார்
56, N.G.O. காலனி
பொன்னேரி - 601204

# ஞாலத் தலைவனின் ஞானவேலை

அன்புள்ள சேவுக......!

இரவு பகலாக எந்நேரமும் நான் எழுதிய நூல்களையே இளைஞர் உலகம் படித்து கொண்டிருக்கும்படியாக இன்பச்சுவை ஊற்றெடுத்து ஆற்றுப்பெருக்காக ஓடிடும் அளவுக்கு எழுதிடும் மொழியாற்றலும், உணர்வு கொப்பளித்தோடும் அநுபவங்களும் பரந்து விரிந்தகன்ற எண்ணற்ற சுவைமிக்க நிகழ்ச்சிகளையும் என்னகத்தே உடையவன் நான். ஆனால், என் தந்தை, அடிக்கடி என்னிடம் 'எந்த ஒரு நாடு விழிச்சியையும் எழுச்சியையும் பெற்றுச் செழிப்பை நோக்கி வேகமாக முன்னேற வேண்டுமானாலும்; அந்த நாட்டு இளைஞர் கூட்டம் உண்மையும், திண்மையும், ஒண்மையும், ஒற்றுமையும், உறுதியும், உயரிய நோக்கும், தன்னம்பிக்கையும், தளர்விலாப் பண்பும், புதுமை நோக்கும், புரட்சிச் சிந்தனையும், ஆக்கச் செயலும், அஞ்சா நெஞ்சும், அடங்கா ஆர்வமிகு உணர்வும் நிறைந்ததாக இருந்திடல் வேண்டும். அந்த இளைஞர்களின் எண்ணங்களும், பேச்சுக்களும், செயல்களும், தாய்மொழி, தாயினம், தாய்நாடு என்ற அடிப்படையையே உயிர்மூச்சாகக் கொண்டிருக்க வேண்டும். அந்த இளைஞர்களின் அறிவாற்றல் தாய்மொழி இலக்கியங்கள், தாயக வரலாறு, தாய்நாட்டு நாகரிகம், தாய் வழிவந்த பண்பாடு, தாயகத்தின் கலைகள்...... முதலியவை பற்றிய தெளிவான செய்திகளை முறையாக உணர்ந்ததாக இருக்க வேண்டும் என்று கூறிய அறிவுரைகள் என்னுள்ளே ஆர்ப்பரிக்கும் கடல்போல் ஆரவாரம் செய்து கொண்டே இருப்பதால் பொழுதுபோக்குக்காக இன்ப சுவைமிக்க இலக்கியங்களைப் படைக்கும் எண்ணமே எழவிடாமல் எந்நேரமும் என் தாய்த் திருநாட்டு இளைஞர்களை கடந்த வீழ்ச்சிகளுக்கும், தாழ்ச்சிகளுக்கும் ஈடுகட்டக் கூடிய எழுச்சிமிக்க படைவீரர்களாக உருவாக்குவதற்காக எழுதிக் குவித்து வருகிறேன்.

அன்பு நண்ப! சிங்கங்கள் எண்ணிக்கையில் சிலவாக இருந்தாலும், அவையே என்னிக்கையில் பலமடங்காக உள்ள கொடிய மிருகங்கள் அனைத்துக்கும் தலைமை தாங்குவது போல், பகைக் கூட்டங்களின் சூழ்ச்சிகளும், சூழ்ச்சிகளால் நிகழும் வீழ்ச்சிகளும் மிகுதியாக உள்ள என் தாய்த் திருநாட்டில் விரல்விட்டு எண்ணக்கூடிய வீர இளைஞர்கள் விவேகத்தோடு செயல்படும்படி உருவாக்கிவிட்டால் போதும்; அதுவே, கருவாக உள்ள பழிகளையும், அழிவுகளையும், இழிவுகளையும் கூட முற்றிலும் அழித்தொழித்துச் செழுமைமிக்க வருங்காலத்தை உருவாக்கிடும். அதனால்தான் என் ஒவ்வொரு நொடி வாழ்வையும் இன்றமிழக இளைஞர் சமுதாயத்தினை உயிர்ப்பிக்கும் முயற்சிகளிலேயே செலவிடுகின்றேன்.

நண்ப! உயரிய மலைமுகடுகளில் கூடுகட்டி வாழும் பறவையின் வேந்தான பருந்தினைப் பார்க்கும் போதெல்லாம், என் தாய்த் திருநாட்டு இளைஞர்களுக்குத் தலைமை தாங்கிடச் சில இளைஞர்களாவது உயரிய கொள்கைகள், கருத்துக்கள், சிந்தனைகள், நோக்கங்கள், செயல்கள் என்ற மலைமுகடுகளால் பருந்தினைப் போல் வாழ்ந்திடக் கூடிய பொற்காலம் என்றைக்கு வந்திடும்' என்று ஏங்குகின்றேன். அதனால்தான் தூங்காமல், துயருறாமல், தளராமல், துணிவுடன் என் தந்தை காட்டிய பாதையில் தொடர்ந்து பணிபுரிகின்றேன்.

ஓம் திருச்சிற்றம்பலம்

அன்பு
சித்தர் கருவூரார்

## மோசமான மோசடியான இந்துமதக் கருத்துக்களுக்குத் திருத்தம்

## இந்துமத மறுமலர்ச்சி வினாவிடைகள்

1. நம்ப முடியாத நிகழ்ச்சிகள் புராணக்கதைகளில் இருப்பதால் அவை தேவைதானா?

இன்றைக்கு விஞ்ஞானிகள் சாதித்துள்ள பல சாதனைகள் நம்ப முடியாதவை போலவே இருக்கின்றன. ஆனால், அநுபவத்தால் நம்புகிறோம். அதுபோல், புராண நிகழ்ச்சிகளைக் குருவருள், திருவருள், தருவின் துணை, கருவின் ஓகம் ... முதலியவற்றை அநுபவித்தால்தான் புரிய முடியும், நம்ப முடியும். பிறகு புராணம் தேவைதானா என்ற ஐயமே எழாது.

குறிப்பு: கற்பனைவாதிகள், மாயாவாதிகள், பாரம்பரியக் குருவைச் சேராதவர்கள், முறையான பயிற்சி இல்லாதவர்கள், வயிறு பிழைக்க புராணம் கூறுபவர், போலி மதத் தலைவர்கள் ... இவர்களால் புராணம் முறையாகவும், முழுமையாகவும் விளக்கப்படாததால்தான் இது போன்ற வினா பிறந்தது!?!?!?

2. "குருவழிக் காண்க! உணர்க! பயிலுக! அடைக! தேறுக! நிற்க! சேருக புரிக!... என்கிறார்களே! இது தேவையா? ("சத்சங்கம்" சமய வாழ்வுக்கு இன்றியமையாததா?)

அன்றாட வாழ்வின் கடமைகள், உறவுகள், உரிமைகள், வெற்றிகள், தோல்விகள், ஏக்கங்கள், ஏமாற்றங்கள்..... முதலியவை மனிதனை ஆட்டிப் படைப்பதால் குருவின் துணையிருந்தால்தான் அனைத்தையும் சமாளித்தபடி அருளுலகச் செல்வங்களையும் சிறு சேமிப்புப் போல் (Small Savings) வாழ்நாள் முழுதும் சேர்த்து வாழ்வின் தேவைகளை நிறைவு செய்து கொள்ள முடியும். 'குருவில்லா வித்தை பாழ்', 'குருவால் தொட்டுக்காட்டப் படாத வித்தை சுட்டுப்போட்டாலும் வராது!' 'குருவே அனைத்துக்கும் கரு', 'குருவும் திருவும் ஒன்றே' என்ற குருபாரம்பரிய வாசகங்களை நினைத்திடுக. குருவுக்காக இழக்கப் போவது தமது பாவமும், துன்பமும், கவலையும்தான்... குருவோடு இரண்டறக் கலப்பதே அனைத்துச் சத்திகளையும் சித்திகளையும் முத்திகளையும் தரும்.

3. "உருவ வழிபாடு உயர்ந்த பக்குவ நிலையைத் தராது. மிகச் சாதாரண மனிதர்களுக்குத்தான் உருவ வழிபாடு தேவை. ஞானிகளுக்கு உருவ வழிபாடு தேவையில்லை....." என்ற கருத்துப் போக்குச் சரிதானா? பயனுடையதா?

இந்த நாட்டில் இந்துமதத்தின் தந்தையாக, தாயாக, சிற்பியாக, ஆரம்பமாக, உயிராக... இருக்கின்ற சித்தர் நெறியைத் தவறான ஆரியமாயைக் கருத்துக்கள் மறைத்தும், குறைத்தும், ஒதுக்கியும், வெறுத்தும், மறுத்தும்... தொடர்ந்து செயல்பட்டதன் விளைவுதான் உருவ வழிபாட்டுக்கு எதிராகப் பிறந்துள்ள கருத்துக்கள். உருவ வழிபாட்டால்தான் பத்தி, சத்தி, சித்தி, முத்தி நிலைகளில் தேர்ச்சி பெற முடியும்! முடியும்! முடியும்!

அருள் அணுக்கள் தேக்கி வைக்கப்பட்டுள்ள அணைக்கட்டுக்களே உருவங்கள். அவை தத்துவ விளக்கங்கள், வரலாற்றுச் சின்னங்கள், கலைக் கருவூலங்கள், அருள்நீர்த் துறையின் இறங்கு துறைகள். உணர்க!

4. ஆன்மிக வாழ்க்கைக்குப் பிரம்மச்சரியம்தான் சிறந்ததா?
இல்லறத்தில் இருந்து ஆன்மீகச் சாதனைகளைச் சாதிக்க முடியாதா?

பிரம்மச்சரியம் என்பது வேறு, துறவு என்பது வேறு. குழப்பமின்றி உணர வேண்டும். பெண்ணின்பமே கூடாது என்பதுதான் பிரம்மச்சரியம். இது ஆரிய வேத நாகரிகக் கருத்து. இது தவறு, மாயம், பொய், பயனற்றது. ஆன்மீக வாழ்வில் வெற்றியைத் தராது.

குறிப்பு: "பெண்ணின்பமே பேரின்பம்!", "பெண்வழிச் சேரலே கரு, குரு, தரு, திரு எனும் நான்கையும் அடையும் வழி", "காயந்திரி மந்தரம் ஓதும் பெண்ணைக் காணல், அடிதொழல், தழுவல், இரண்டறக் கலத்தல் எனும் நான்கே நான்மறை, நான்முறை, நானெறி, நான்வேதம், நவநாதம், நவபோதம், நவஓதம், நவசித்தம், பதினெண் நாதாந்தம், பதினெண் வேதாந்தம், பதினெண் ஆகமம், பதினெண் புராணம்.... முதலியவற்றில் அருள்நெறியாக விளக்கப் படுகின்றன"

ஆனால், 'அருட்கலைகளைப் பயிற்சி செய்யும் காலம், தேர்ச்சி பெற்று அருட்கலைகளால் சித்திக்கும் முத்திக்கும் முயற்சிக்கும் காலம் தனித்திருத்தலால் மிகுந்த பயனைத்தரும்' என்ற குருபாரம்பரிய வாசகம் பிரம்மச்சரியத்தை ஆதரிப்பது போல் உள்ளது. **குறிப்பிட்ட காலமே.**

5. மனைவி மக்களைத் துறந்துதான் மாபெரும் சித்திகளைப் பெற முடியுமா? ஆண்பெண் இன்பத்துக்குப் பத்தி மார்க்கம் தடையா?

பதினெண் சித்தர்கள், மனித இனம் விலங்குகளோடு விலங்காக வாழ்ந்த காலத்தில் இளமுறியாக் கண்டத்தில் (The Lost Lemuria continent- குமரிக் கண்டம்) தங்களது தாய்மொழியான தமிழ்மொழியில் தங்களது மதமான இந்து மதத்தை வழங்கியே மனிதப் பண்புகளையும், நாகரிகங்களையும் வளர்த்தார்கள். அவர்களுடைய விந்துவழி வாரிசுகளும், குருவழி வாரிசுகளும் தொடர்ந்து வாழ்ந்தும் கூடத் தமிழர்களே அவர்களின் தலைமையையும், துணையையும், வழிகாட்டலையும்... ஏற்றுப் போற்றவில்லை. அதனால்தான், இந்துமத வரலாறு, தத்துவம், இலக்கியம், கலை, ஒழுகலாறு, விதி, சட்டம், மரபு, சம்பிறதாயம், சாத்திறம், தோத்திறம் ... முதலிய அனைத்தும் குழப்பமடைந்தன.

பதினெண் சித்தர்கள் வழிபாட்டுக்கு உரியவர்களாகப் படைத்துள்ள 'கடவுள்கள்' (48 வகையினர்) அனைவருமே மனைவியோடு பெண்ணின்பம் துய்த்து வாழும் இல்லறத்தார்களே. பிறகு எப்படி ஆண்பெண் இன்பத்துக்குப் பத்தி மார்க்கம் தடையாகும்?

மனைவி மக்களைத் துறக்கும் "துறவி" பற்றிய கருத்து ஆரியருடையதே. இது தவறு, பயனற்றது, 'துறவியாக இருப்பவன் குரு, ஆச்சாரி, பீடம், மடம், சன்னிதானம், ஆதினம், அமளிகை, திருவடி, இருக்கை, நாயகம் ... என்ற 48 அருட்பட்டப் பொறுப்புக்களில் எதையுமே ஏற்கும் தகுதியுடையவனல்ல. துறவி ஒரு பாவியே' என்ற குருபாரம்பரிய வாசகமே இங்கு பதிலாகத் தரப்படுகிறது.

6. இந்துமதத் தலைவர்கள் பெரும்பாலும் துறவிகளாகவே இருக்கிறார்கள். பதினெண் சித்தர்கள்தான் இந்துமதத்தைப் படைத்தவர்கள் என்பதால் அவர்களின் விளக்கமென்ன இதற்கு?

இந்த வினா தெளிவாக இல்லை. துறவி இந்துமதத்தில் எந்தவித முதன்மையும் பெறவே முடியாது. இல்லறத்தார்தான் பூசைகளை, தவங்களை, வேள்விகளை, யாகங்களை, யக்ஞங்களை, ஓமங்களை, ... முன்னின்று செய்ய வேண்டும் என்ற சட்டமே 'பூசாவிதி',

'குருமார் ஒழுகலாறு', 'கருவறைப்படி' எனும் நூல்களில் உள்ளது.

குறிப்பு: 'பதினெண்சித்தர்கள் அருளுலக வாழ்வில் ஈடுபடுபவர்களின் நிலைகளை 16 வகையாகக் குறிக்கிறார்கள். 1. அறவி, 2. ஆறவி, 3. இறவி, 4. உறவி, 5. கறவி, 6. துறவி, 7. திறவி, 8. பறவி, 9. பிறவி, 10. புறவி, 11. பைறவி, 12. நறவி, 13. மறவி, 14. மைறவி, 15. வறவி, 16. வேறவி. இவர்களில் துறவி என்பவர்கள் கூட இல்லற வாழ்வு வாழ்ந்து, பல்வேறு காரணங்களைக் குருவிடம் விளக்கி, குருவழிப் பூசையால் குருவின் ஒப்புதல் பெற்று துறவு மேற்கொள்ள வேண்டும். அதுவும், தன்னை நம்பியிருக்கும் பெற்றோர், வாழ்க்கைத்துணை, உடன் பிறந்தார், மக்கள், கடன் கொடுத்தார் முதலியோருக்கு உரிய வாழ்வியல் வழிவகைகளைச் செய்த பிறகே குருவாணைப்படி துறவு வாழ்வு வாழவேண்டும்' என்ற குருபாரம்பரிய வாசகம் தெளிவான, முழுமையான, முடிவான பதிலாக இங்கே வழங்கப்படுகிறது.

7. கடவுள் ஒருவரா? பலரா?

பதினெண் சித்தர்கள் வழிபடுநிலையினர் என்று தமது இந்து மதத்தில் 48 பேர்களின் பட்டியலைத் தருகின்றார்கள்.
1. அப்பன், 2. ஆயாள், 3. கரு, 4. குரு, 5. தரு, 7. அல்லா(எல்லா) 8. பரம்பொருள், 9. மகாப்பொருள், 10. ஏகப்பொருள், 11. அநேகப் பொருள், 12. முத்தீ, 13. ஐந்தீ, 14. பாழ்வெளி, 15. வெட்டவெளி, 16. கருவறை, 17. இறை, 18. கடவுள், 19. தெய்வம், 20. ஆண்டவர், 21. ஆளுபவர், 22. பட்டவர், 23. படாதவர், 24. தேவியர், ... 30. அமரர், 31. அருவத்தார், 32. உருவத்தார், 33. அருவுருவத்தார் ... இப்படி நாற்பத்தெட்டுப் பேர்கள் குறிக்கப்படுகின்றனர். இத்துடன் 108 திருப்பதிகள், 243 சத்தி பீடங்கள், 1008 சிவாலயங்கள் வழிபாட்டுக்குரியன என்று அறிவிக்கப் படுகின்றன. எனவே, பதிலைப்புரிய முற்படுங்கள்.

8. கோயில் ஆன்மீக வாழ்வுக்குத் தேவையா?

அருளை அநுபவப் பொருளாக வழங்கும் அருள் அணு ஊற்றுக்களே கோயில்கள். அருளைச் சினையாக்கிக் கொள்ள அருட்சினை நடைபெறும் இடமே கோயில். அருளாட்சி அரியணையை நிலைநிறுத்தும் ஆட்சிக் கோட்டங்களே, அருட் கல்விதரும் கல்விச் சாலைகளே நமது கோயில்கள். மருத்துவ மனைகளாக, மனமகிழ் மன்றங்களாகவும் பயன்படுபவையே நமது கோயில்கள். இதற்கு மேல் இவ்வினாவுக்குப் பதில் தேவையில்லை! புரிந்து கொள்ளுக.

## காயந்திரி மந்தரம் விளக்கக் கட்டுரை -- தொடர்ச்சி

உறையினின்று வாளை எடுத்து உள்ளே போடுவது போல காயந்திரி மந்தரம் சொல்லுவதற்கு முன்னும் பின்னும் இந்த வேண்டுகோள் வாசகங்களைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாசகங்கள் பூசையின் ஆரம்பத்தில் கற்பூரம் ஏற்றியோ, புகைமூட்டியோ, யாகம் வளர்த்தோ, விண்மீன் பார்த்தோ, சூரியன் பார்த்தோ, நிலவு பார்த்தோ ஒரு முறை சொல்லப்பட்டவுடன் காயந்திரி மந்தரம் (108) நூற்றெட்டுத் தடவைகள் ஓதப்படல் வேண்டும். பூசை முடிக்கும் போது மேற்படி வாசகங்கள் ஒரு முறை சொல்லப்படல் வேண்டும். பக்குவத்துக்கேற்பக் கண்ணை மூடியோ, திறந்தோ காயந்திரி மந்தரம் ஓதலாம். ஓதும்போது இடையிடையே கண்ணைத் திறந்தும் மூடியும் ஓதலாம். அமர்ந்தோ, நின்றோ, ஒரே திசை பார்த்தோ, எட்டுத் திசையும் சுற்றியோ....... காயந்திரி மந்தரம் ஓதலாம்!

* ச் என்று அழுத்தியே உச்சரிக்க வேண்டும்.

சமசுக்கிருத்த்தில்

'ஞீகாயத்ரீ மஹா மந்த்ரம்'

ஓம் பூர்புவஸ்ஸுவ!
தத்ஸ விதுர் வரேண்யம்!
பர்கோ தேவஸ்ய தீ மஹி!
தியோ யோந! ப்ரசோத யாத்!

என்று ஆரியராலும், சமசுக்கிருதப் பற்றுடைய தமிழராலும் ஓதப்படுகிறது. இது தவறு, இது எந்தச் சத்தியையோ! சித்தியையோ! முத்தியையோ!... தரவே தராது. இது பத்திக்குப் பயன்படாது. எனவே, ஒவ்வொரு தமிழரும் உடனடியாக அன்றாடம் பதினெண்சித்தர்கள் பகர்ந்துள்ளது போல் காயந்திரி மந்தரம் முறையாக ஓதி நிறைவான அருள்நிலைகளைப் பெற வேண்டும். அதுதான், தனி மனிதர்களைக் காக்கும். தமிழைக் காக்கும், இந்துமதத்தைக் காக்கும்.

அனைத்து அருளாளர்களும், அருளுலக ஆர்வலர்களும், ஆதரவாளர்களும் காயந்திரி மந்தரம் ஓதி அருட்செல்வர்களாக உருவாவதுதான், இந்து மத மறுமலர்ச்சிப் பணியை வெற்றி பெறச் செய்யும். இந்துமதமே உலக மானுடரைக் காக்கும்.

சித்தர் ஏளனம்பட்டியார்
முதல் இ.ம.இ. தலைவர்
கி.பி. 1772இல் எழுதப்பட்டது.

---

## அருளுறு காயந்திரி மந்தரம்
(தமிழிலிருந்து சமசுக்கிருதத்தில் உருவாக்கப்பட்டது ஸ்ரீகாயத்ரீ மஹா மந்த்ரம்)

**"ஓம் பூர்வ புலன்கள் சுவையாகுக!**
**தத்துவ வித்துக்கள் அரணுகுக!**
**பாரின்கோ தேவர் வசிக்கும் தீ மகிழட்டும்!**
**தீயே யோகப் பரஞ்சோதி யாகும்!"**

இக்காயந்திரி மந்தரம் சொல்லுவதற்கு முன்னும் பின்னும் சொல்ல வேண்டிய வேண்டுகோள் வாசகங்கள்:

ஓம் பராசத்தி நமச்சிவாய!
ஓம் நமச்சிவாய பராசத்தி!
ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி!
ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி!
ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி!
ஓம் சிவவசி! ஓம் சிவவசி! ஓம் சிவவசி!
ஓம் சிவவசி! ஓம் சிவவசி! ஓம் சிவவசி!
ஓம் உண்டடங்களே! பிண்டடங்களே!
உயிரினங்களே! பயிரினங்களே!
அண்டடங்களே! பேரண்டடங்களே! அண்டபேரண்டடங்களே!
விழிச்சி கொள்க! எழுச்சி கொள்க! செழுச்சி பெறுக!
யாமே அனைத்துமாக உதவுக!
காயந்திரி மந்தரம் கூறுகிறேன்.
பயனுகட்டும்! சுவையாகட்டும்!
முற்பிறப்பும் மறுபிறப்பும் இப்பிறப்பிலேயே நிறைவாகட்டும்!
ஆவி ஆன்மா உயிர் மூன்றும் ஒன்ருகட்டும்
அனைத்துக்கும் தாயாக! ஆயாவாக!
அப்பனுக! தாத்தாவாக! இருப்பவர்களே
ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக!

ஆரியர்கள் தாங்கள் உண்டாக்கிய க்ஷத்திரியர், ஆரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வர்ணுச்சிரமப் பிரிவில் (சாதிகள்) முதல் மூவரும் மட்டுமே மேட்டுக்குடியினர், உயர்ந்தவர். எனவே, இவர்கள் மட்டும்தான் காயத்ரீ மந்த்ரம் சொல்ல வேண்டும், சூத்திரர் சொல்லக் கூடாது என்றனர்.

குறிப்பு: ஆரியர், சூத்திரர் என்றது இந்தியாவின் பூர்வீகக் குடிகளான தமிழர்களைத்தான். ஏனெனில், தமிழர்கள் எற்கனவே, காயந்திரி மந்தரம், மாந்தரம், மாந்தரீகம், மந்திரம், மந்திறம் என்று ஐந்துவகை அருள் வாசகங்களை ஆறு வேளைத் தொழுகைகளில் பயன்படுத்தினர். காயந்திரி மந்தரம் மட்டும் காலை மாலை இரு வேளைகளிலும் சொல்லப்படலாம். மற்ற நான்கும் நான்கு வேளைகளில் சொல்லப்படல் வேண்டும். மதியம், நள்ளிரவு, முழுஇரவு, முழுப்பகல்.
மேலும், தமிழர், ஆரியர் தமிழரின் காயந்திரி மந்தரம் தான் ஆரியரால் சமசுக்கிருதத்தில் காயத்ரீ மந்த்ரம் என்று உருவாக்கப்பட்டதைக் கண்டுபிடித்திடுவர் என்பதால்தான் தமிழர்கள் இதை அறியாமல் சூழ்ச்சியாகக் காத்தனர் ஆரியர்.

2. சாதாரண மானுட வாழ்வில் கடவுளின் அருளைத் தேவையான அளவு பெற்று நிம்மதியும், நிறைவும், அமைதியும், அன்பும் உடைய வாழ்வு வாழ்ந்திடக் காயந்திரி மந்தரம்தான் பேருதவி புரியும். அன்றாடம் 108 முறை ஓதினால் போதும். எல்லா நலங்களும், விழிச்சிகளும், எழுச்சிகளும், செழுச்சிகளும் ஏற்பட்டிடும்.

3. ஆரியர்கள் தங்களின் காயத்ரீ மகாமந்த்ரத்தையே ப்றம்மோபதேசம் என்று பரப்புகிறார்கள். பூணூல் போட்டவர்கள் இதைக் கட்டாயம் பயிற்சி செய்ய வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டனர்.

குறிப்பு: குருபாரம்பரியத்தில் இறை, கடவுள், தெய்வம் எனப்படும் 48 பேர்களும் சிவன், திருமால், பிறமண் முதலிய திருக்களும், தன்வந்திரி, பரசுராமர், கலைக்கோட்டு முனி, பிருங்கி, கன்வர், விசும்பாத்திரர், வசிட்டர், பரத்துவாசர், கச்சியப்பர், காசிபர், ஆங்கிரசர், கெஇதமர், அத்திரி,...... முதலிய தருக்களும் (தரு = முனிவர்) ஆறுகாலத் தொழுகைகள் செய்ததால்தான் அருட்சத்தியோடு விளங்கினர். காயந்திரி மந்தரம் குருகுலம், தவச்சாலை, வேள்விச்சாலை, பத்திச்சாலை, அருட்கோட்டம், ஞானப்பள்ளி...... மாணாக்கரால் ஆறுகாலம் அன்றாடம் ஓதப்பட்டது.

4. சூரியனை முழுமுதலாகக் கொண்டு அவனிருக்கும் திசை நோக்கித் தொழுவதுதான் காயந்திரி மந்தரம்.

குறிப்பு:
1. கருவறைகளில் கூறிடல்
2. வெட்டவெளித் தவத்தில் கூறிடல்
3. ஐந்தீ வேட்டலில் கூறல்
4. முத்தீ ஓம்பலில் கூறல்
5. மாயைகளை வென்றிடப் பூசையில் கூறல்
6. நீள்தவத்தில் + ஆழ் பூசையில் + குருவோடு கலப்பதில் ஆவி + ஆன்மா + உயிர் ஒன்றிடக் குகைக்குள் (அறைக்குள் = வீட்டுக்குள் மேலும் கீழும் நான்கு பக்கமும் மூடிய இடத்தில்) கூறல்

என்று ஆறு இடங்களில் கூறிடக் காயந்திரி மந்தரம், மாந்தரம், மாந்தரீகம், மந்திரம், மந்திறம் எனும் ஐந்து படைக்கப்பட்டன. இவற்றில் எதெதை எவ்வப்பொழுது பயன்படுத்தல் என்பதனைக் குருவழிக் காண்க. குருவால் இட்டும் தொட்டும் சுட்டியும் அருளைப் பெற்றால்தான் அனைவருக்கும் பத்திநிலை, சத்திநிலை, சித்திநிலை, முத்திநிலை எனும் நான்கிலும் முழுமை கிடைக்கும்; நிறை வெற்றி முழுமையாகக் கிடைக்கும்.

- குருபாரம்பரிய வாசகம்

5. காயந்திரி மந்தரம் சொல்லுபவர் குருவழி அருளுரை, அறிவுரை, அருளார்ந்த அறிவுரை, அறிவார்ந்த அருளுரை பெற்றால் 108 திருப்பதிகள், 243 சத்தி பீடங்கள், 1008 சிவாலயங்கள் எனப்படும் அனைத்தையுமே சித்தி செய்யலாம்

- குருவாக்கு, குருவாசகம், தருவாக்கு, தருவாசகம், குருபாரம்பரிய வாசகம்

6. கருக்கள், குருக்கள், தருக்கள், திருக்கள், தாத்தாக்கள், ஆத்தாக்கள் எனும் ஆறு பேர்கள் வழங்கியுள்ள அருளுரை, அறிவுரை, அருளார்ந்த அறிவுரை, அறிவார்ந்த அருளுரை... முதலியவற்றை நன்கு பயன்படுத்தி இறை + உயிர் + தளை எனும் (பதி + பசு + பாசம்) மூன்றையும் இணைத்தல்; முற்பிறப்பு + மறுபிறப்பு + இப்பிறப்பு எனும் மூன்றையும் இணைத்தல் நிறைவேறத்தான் காயந்திரி மந்தரம், மாந்தரம், மாந்தரீகம், மந்திரம், மந்திறம் எனும் ஐந்தும் நமசிவாய என்ற ஐந்தெழுத்தின்

விளக்கமாகப் பதினெண் சித்தர்களால் படைக்கப்பட்டன.

இவை ஐந்துவகை; பூசைக்காலங்கள் ஆறு; ஆனால், காலை + மாலை ஒரே வேளையாகக் கருதப்படல் மரபு என்பதால் பூசை வேளை ஐந்துதான். ஐந்தெழுத்து = பஞ்சாட்சரம் = நமசிவாய = ஐந்துவகையான காயந்திரி மந்திரங்கள்* (* அருள்வாசகம்)

குறிப்பு: காயந்திரி மந்திரங்கள் தமிழர்களுடையவைதான். தமிழில்தான் முதன் முதல் பதினெண் சித்தர்களால் படைக்கப்பட்டன.
நமசிவாய என்ற ஐந்தெழுத்தின் விளக்கமே ஐந்து வகையான காயந்திரி மந்திரங்கள்.

7. தமிழர்கள் எல்லாரும் அன்றாடம் காயந்திரி மந்தரம் 108 தடவை சொல்லியேயாக வேண்டும். இதுதான் தமிழர்களை மொழிப்பற்றும், இன ஒற்றுமையும், நாட்டுரிமையும், பண்பாட்டுப் பிடிப்பும் உள்ளவர்களாக ஆக்கிடும். தமிழர்க்கு அகவொளியும், முகவொளியும் ஏற்பட்டால்தான் இகவொளி கிடைக்கும். அதன்பிறகே அமுதத் தமிழால் தன்னுரிமை மிகு அருளாட்சி அமைக்க முடியும்.

8. கருவைப் புரியக் காயந்திரி மந்திரங்கள் தேவை. அதன் பிறகே, குருவைப் புரிய முடியும். குருவே திரு; திருவே தரு; தருவே கரு; கருவே குரு;... என்பன தமிழர்களுக்கு முழுமையாக விளக்கமானால்தான் குருவழி வாழ்ந்து விடுதலை பெறுவர். தமிழினம் மெய்ஞ்ஞானக் குருவைத் தெரிந்து, விரும்பி, ஏற்றுச் செயல்பட்டால்தான் எல்லா ஞானங்களையும் பெற்று உரிமைமிகு பெருமை வாழ்வு பெற்றிடும். குருவழி நின்று ஒழுகக் கற்றால்தான் தமிழினம் களப்பிறர், பல்லவர், சோனகர், யவனர், ஆரியர் ... முதலியோரிடம் அடிமைப்பட்டு மிடிமையுற்று, இழிந்து, சிதைந்து, சீரழிந்து, தலைகுனிந்து, சிந்தை வெந்து, நெஞ்சம் நைந்து ... வாழும் வாழ்வை மாற்றிட ஒன்று திரள முடியும். சூரிய குலத்தின் தலைமையில் அருளாட்சியை அமைக்க முடியும். இந்து மதத்தால்தான் தனிமனித மாணிக்கங்களை மாலையாக்க முடியும். ஒவ்வொருவரும் இந்து மதத்தை உணரவும், பயன்படுத்திப் பயனடையவும் அன்றாடம் காயந்திரி மந்தரம் 108 முறை ஓத வேண்டும்.

குருபாரம்பரிய வாசகம்
தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய
பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி
குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அருளியது.

சோழப்பேரரசு அருளாட்சி நடத்த உருவாவதற்கு இவ்வாசகங்களே பேருதவி புரிந்து தமிழர்களை ஒன்று திரட்டி ஒற்றுமைப்படுத்திப் பெரும் வீரம் காட்டிப் போரிடச் செய்தன.

- கருவூர்த்தேவர்

9. பரம்பரையாகக் காயந்திரி மந்தரம் சொல்ல வேண்டும். அது ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் வீழ்ச்சியோடு மதுரை எரிந்ததோடு, மதுரைத் தமிழ்ச்சங்கங்கள் இடிக்கப்பட்டும், ஏடுகள் எரிக்கப்பட்டும், தமிழ்ப் புலவர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டும் பேரழிவு தமிழினத்துக்கு ஏற்பட்டதோடு தடைப்பட்டு விட்டது. எனவேதான், பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் பெரிய அருட்கொடை வள்ளலாக வாழ்ந்து ஆர்வம்

உள்ளவர்களையெல்லாம் இட்டும், தொட்டும், சுட்டியும் அருளாளர்களாக மாற்றினர். ஐந்து வகையான காயந்திரி மந்திரங்களையும் வழங்கினர். குருவழி வாரிசுகளையும், விந்து வழி வாரிசுகளையும் உருவாக்கினர். ஆரத்தழுவி ஆர்வலர்களையும், விருப்பாளர்களையும், ஆதரவாளர்களையும் படிப்படியாக அருளாளர்களாக்கினர். அதனால், அடியான்களும், அடியார்களும், அடியாள்களும் அருட்படை நடத்தும் நாயகர்களாக, தளபதிகளாகச் செயல்பட்டுச் சோழப்பேரரசை உருவாக்கி அருளாட்சியைத் துவக்கினர். பழியோ, இழிவோ, அழிவோ, தாழ்ச்சியோ, இகழ்ச்சியோ,... அருட்சேனை திரட்டும் பணியில் ஈடுபட்டால் அது பெரு நெருப்பில் ஈரவிறகும் எரிவது போல் போரிலும், போரின் வெற்றியாலும் மறைந்திடும். பீடாதிபதியால்தான் வாழையடி வாழையாக அருளாளர்கள் இந்த வையகத்துக்குக் கிடைக்கிறார்கள்.

ஐந்து வகை நிலத்தவரும் பயனடைய ஐந்து வகைக் காயந்திரி மந்திரங்கள் ஐந்து எழுத்தான நமசிவாயத்தின் விளக்கமாகப் பிறந்தன.

- கருவூர்த் தேவர்.

## காயந்திரி மந்தரம் பற்றிய சித்தர் காகபுசுண்டரின் விளக்கம்

### மறைமலையடிகள் கருத்து

சித்தர் காகபுசுண்டர் ம. பழனிச்சாமிப் பிள்ளை அவர்கள் இவ்வுலக மாபெரும் மார்க்சீயச் சிந்தனையாளர்களுள் ஒருவர். ஆனால், இவர் கடவுள் மறுப்பாளராகவோ, வெறுப்பாளராகவோ, மத எதிர்ப்பாளராகவோ, நாத்திகராகவோ வாழவில்லை. இவரை இலெனின், மாவோ,... போன்றவர்களுக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார் திரு எம்.என்.ராய்.

திரு எம்.என்.ராயும் இவரும் (M.N. Roy and M.P. Pillai founded the International Communist Party and the Radical Democratic Party) உலகக் கம்யூனிச இயக்கம் அமைப்பையே தோற்றுவித்த மூலவர்கள். இவர்களே இந்தியாவுக்காகச் சிறப்பாகப் பகுத்தறிவுக் குடியரசுக் கட்சி என்ற இயக்கத்தையும் தோற்றுவித்தார்கள்.

திரு எம்.என். ராயும், டாக்டர் ஐன்சுடீனும் (அணுக்கொள்கையைக் கண்டறிந்த செர்மானிய நாட்டு யூத இன விஞ்ஞானி) சேர்ந்து செர்மனியில் உருவாக்கிய 'உலக மத ஆய்வுக் குழு' (The World Religious Research Society - T.W.R.R.S.) எனும் அமைப்பின் தலைவராக இந்திய மண்ணில் வாழையடி வாழையென வரும் சித்தர்களின் வழி வந்த சித்தர் காகபுசுண்டர் ம. பழனிச்சாமிப் பிள்ளையே நியமிக்கப்பட்டார்.

சித்தர் காகபுசுண்டருக்கு நேரடியாகச் சமசுக்கிருத மொழியில் மிகுந்த புலமையை வளர்த்துக் கொள்ள முடியவில்லையே என்ற வருத்தமுண்டு. ஆனால், மாக்சுமுல்லரின் (Maxmueller) ஆங்கில நூல்கள் மூலம் சமசுக்கிருத இலக்கிய உலகைப் புரிந்து; கி.பி. 1772 இல் இந்து மறுமலர்ச்சி இயக்கம் அமைத்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் (கண்டப்பக் கோட்டைக் கருவூரார்) உ. இராமசாமிப் பிள்ளை அவர்கள் சமசுக்கிருத மொழி பற்றிக் கூறிய கருத்துக்களை ஆராய்ந்தார்.

இது பற்றி இவர், ".... நான் எதையும் சிந்தித்து ஆராய்ந்து உண்மையைக் கண்டறியும் மார்க்சீயவாதி. மார்க்சீயம் எவரையும் நேர்மையான சிந்தனையாளராக்கும். சமசுக்கிருத மொழியை வெறுப்பதும், மறுப்பதும், எதிர்ப்பதும் தேவைதானா என்ற கருத்துப் போராட்டம் எனக்கு எப்போதும் இருக்கிறது.

தமிழிலிருந்த காயந்திரி மந்தரம் என்பதை ஆரியர்கள் அழித்திடவே அதே போன்ற ஒலியையுடைய 'ஸ்ரீகாயத்ரீ மஹாமந்த்ரம்' ஒன்றைப் படைத்தார்கள். ஆனால், தமிழிலுள்ள காயந்திரி மாந்தரம், மாந்தரீகம், மந்திறம், மந்திரம் எனும் நான்கை ஆரியர் அறியமுடியாதபடி சித்தர்கள் காத்திட்டதால்தான் அவை பிழைத்தன என்ற கருத்தைத் தமிழ்ப் பெரியார் மறைமலையடிகளிடம் பலமுறை எடுத்துக் கூறி இது பற்றிய அவரின் கருத்தைக் கேட்டேன். அவர் கூறிய பதில் கண்டப்பக் கோட்டைக் கருவூரார் எனப்படும் கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளையின் கருத்தையே வலிமைப் படுத்தியது. எனவே, ஒரு மார்க்சீயவாதி என்ற முறையில் நான் மறைமலையடிகளாரின் கருத்தை அப்படியே குறித்து வைக்கிறேன்.

மறைமலை அடிகள்: 'காயத்ரீ ஜெபம் என்பது வெறும் ஏமாற்றே. அந்த மந்தரத்தைச் சொல்லிச் சத்தி பெற்றவர்களோ! சித்தி பெற்றவர்களோ! கிடையாது. நமது தேவார, திருவாசகப் பாடல்களுக்கு இருக்கிற சத்தியில் கோடியில் ஒரு பங்கு கூட இதற்கு இல்லை.

சமசுக்கிருத பண்டிதர்கள் யாரும் இந்தக் காயத்ரீ மந்த்ரத்திலுள்ள சொற்களுக்கு எந்தக்

குறிப்பிட்ட நிகண்டையோ (அகராதி Dictionary) குறிப்பிட்டுப் பொருள் சொல்லுவதில்லை. இந்த மந்தரப் பாடலும் இலக்கண நூலுக்கு ஒத்ததாக இல்லை. எனவே, இது தமிழிலிருந்த மந்தரத்தின் ஒலியை மட்டும் அப்படியே பின்பற்றி உருவாக்கப் பட்டதாக இருக்கலாம். சித்தர் ஏளனம்பட்டியார், 'பதினெண்சித்தர் பீடாதிபதிக்குத்தான் காயந்திரி மந்தரத்தை வெளியிட உரிமையுண்டு' என்று கூறிச் சென்று விட்டதால், தமிழில் உள்ள காயந்திரி மந்தரம் தெரிய முடியவில்லை. அதனால், சமசுக்கிருதக் காயத்ரீ மந்த்ரத்தைத் தமிழில் முதலில் தோன்றிய காயந்திரி மந்தரத்தோடு ஒப்பிட முடியவில்லை.

இன்றைய சமசுக்கிருதப் பிரியர்கள் காயத்ரீக்குக் கூறும் பொருள் உண்மையானதல்ல. எந்த ஒரு சொல்லுக்கும் அவர்கள் கூறும் பொருள் உண்மையில் அச்சொல்லுக்குரியதல்ல; வலிந்து இவர்களாகக் கூறியதேயாகும்.

ய = எவர்
ந = நம்முடைய
திய = புத்தியை
ப்ரசோதயாத் = தூண்டுகிறரோ
தத் = அப்படிப்பட்ட = (பரப்ரஹ்மம்)
தேவஸ்ய = ப்ரகாசனுை
ஸவிது = உலகை உண்டு பண்ணுபவருடைய, அதாவது சூரியன், சிவன், நாராயணன்... என்போருடைய
வரேண்யம் = மிக உயர்ந்ததான
பர்க = தேஜஸ்ஸை
தீமஹி = தியானம் செய்கிறோம்.

அதாவது, அறிவை நல்ல விஷயத்தில் பிரேரணை செய்யப் பழக்குகிறோம் எனப்படும் இப்பொருள்களைக் காசிச் சமசுக்கிருதப் பண்டிதர்கள் கூட இலக்கிய இலக்கண ஆதாரம் காட்டி மெய்ப்பிக்கவில்லை... ' என்று **மறைமலை அடிகளார் கூறினார்."

** இங்கே மறைமலை அடிகளாரின் தூயதனித் தமிழ் நடையில் பதில் இல்லை. அதாவது ம.பழனிச்சாமிப் பிள்ளை சித்தர் காகபுசுண்டர் தமது சொந்த நடையில் மறைமலை அடிகளாரின் கருத்தை எழுதியுள்ளார்.

குறிப்பு: ஆரியர்களால் ஓதப்படும் காயத்ரீ மஹாமந்த்ரத்தில் உள்ள சில சொற்களுக்குப் பொருளில்லை என்று மறைமலை அடிகளே கூறியுள்ளார். அவையாவன:
1. பூர் 2. புவஸ் 3. தியோ 4. யோந 5. விதுர